**அம்பலாங்கொடை நகர சபை**
**காலி மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 மார்ச் 30 ஆந் திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2015 மார்ச் 31 ஆந்திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 திசெம்பர் 16 ஆந் திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து அம்பலாங்கொடை நகர சபையின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமான நிலைமையினை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டிற்கான மதிப்பிடப்பட்ட ரூபா 15,000,000 முத்திரைக் கட்டண வருமானம் ஆண்டின் வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) உள்ளூராட்சி திணைக்களத்திடமிருந்து நகர சபைக்கு நன்கொடையாக கிடைத்த 10 நடமாடும் கூடங்களின் (கெனபி) பெறுமதி மதிப்பிடப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டில் நன்கொடையாக கிடைத்த ரூபா 30,065,714 கிரயமான 03 வாகனங்களின் பெறுமதி, மானியங்கள் மூலம் பங்களிப்புச் செய்யும் கணக்கின் கீழ் மூலதனமாக்கப்படாமல் மூலதன ஈடுபாட்டிற்கு வருமானத்திற்கு பங்களிப்புக் கணக்கின் மூலம் மூலதனமாக்கப்பட்டிருந்தது.

#### 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட ரூபா 25,223,497 கூட்டுத்தொகையான 09 கணக்கு விடயங்களுக்குரிய மீதிகள் மற்றும் அவற்றின் துணைப் பதிவேடுகள் மற்றும் அறிக்கைகளில் காணப்படும் மீதிகளுக்கிடையே ரூபா 3,483,232 வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

#### 1.3.3 பெற வேண்டிய கணக்குகள்

முன்னைய ஆண்டின் இறுதியில் ரூபா 88,305,874 கூட்டுத்தொகையான பெற வேண்டிய மீதிகள் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 91,200,000 வரை அதிகரித்திருந்தது. அதில் உள்ளடக்கப்பட்ட ரூபா 8,334,529 தொகையான நிலுவை வாடிவீட்டு வாடகை மற்றும் ரூபா 746,087 தொகையான நிலுவை வினோத வரி என்பன 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக நிலுவையாக இருந்து வந்த போதிலும், அதனைத் தீர்வுசெய்வதற்கு மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 1.3.4 செலுத்த வேண்டிய கணக்குகள்

மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 66,442,579 தொகையான தீர்வு செய்யப்படாத பொறுப்புக்கள் அவதானிக்கப்பட்டதுடன் அப்பொறுப்பு மீதிகளைத் தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.5 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

ரூபா 13,649,081 கூட்டுத்தொகையான 07 கணக்கு மீதிகளை உறுதிப்படுத்துவதற்குரிய பதிவேடுகள் மற்றும் மீதிகளை உறுதிப்படுத்தும் கடிதங்களும் ரூபா 73,764,420 கூட்டுத்தொகையான நிலையான சொத்துக்களின் கொள்வனவு அல்லது நன்கொடையாக கிடைத்த திகதிகள் மற்றும் நாளதுவரையாக்கப்பட்ட நிலையான சொத்துக்கள் பதிவேடு போன்ற சான்றுகள் சமர்ப்பிக்கப்படாமையால் கணக்காய்வின் போது அவற்றை திருப்திகரமாக பரீட்சிக்க முடியாதிருந்தது.

### 1.3.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள்

இரண்டு வங்கிக் கணக்குகளுக்குரிய வழங்கப்பட்ட போதும் கொடுப்பனவிற்காக சமர்ப்பிக்கப்படாத செல்லுபடிக்காலம் கடந்த ரூபா 198,888 ஆன 31 காசோலைகள் தொடர்பாக நிதிப்பிரமாணம் 396(ஈ) பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2015 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவினை விஞ்சிய வருமானம் ரூபா 14,757,494 ஆக காணப்பட்டதுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 20,948,592 ஆகும். அதன் பிரகாரம் மீளாய்வண்டின் நிதி விளைவுகளில் ரூபா 6,191,098 ஆன வீழ்ச்சியொன்று தென்பட்டது.

### 2.2 பகுப்பாய்வு ரீதியான நிதிசார் மீளாய்வு

(அ) முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் போது மீண்டுவரும் வருமானத்தில் 86 சதவீதமான மீண்டெழும் செலவினம் காணப்பட்டமையால் சபையின் வருமானத்திற்கு ஒப்பாக செலவினம் மிகவும் உயர் மட்டத்தில் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) மீளாய்வாண்டு மற்றும் முன்னைய இரு ஆண்டுகளுக்குரிய வருமானத்திற்கான உதவிகள், சுய வருமானமீட்டல் மற்றும் மீண்டுவரும் செலவினம் என்பவற்றினது பொழிப்பு பின்வருமாறு,

| ஆண்டு | மொத்த மீண்டுவரும் வருமானம் | வருமான மானியம் | சுய வருமான ஈட்டல் | மொத்த மீண்டுவரும் செலவினம் | சுய உற்பத்தி வருவாயிலும் கூடிய மீண்டுவரும் செலவினம் |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| 2015 | 106,834,167 | 63,663,525 | 43,170,642 | 92,076,672 | 48,906,030 |
| 2014 | 98,406,501 | 46,913,888 | 51,492,613 | 77,457,908 | 25,965,295 |
| 2013 | 93,016,099 | 43,520,442 | 49,495,657 | 76,153,722 | 26,658,065 |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) ஒவ்வொரு ஆண்டிலும் வருமான உதவிகளின் பெறுவனவு கருத்திற்கொள்ளக் கூடியளவில் அதிகரிப்பொன்றைக் காண்பித்தது.

(ii) சபையின் மீண்டுவரும் செலவினம் தொடர்ச்சியாக அதிகரிக்கும் வேகத்தில் கருத்திற்கொள்ளக் கூடியளவில் அதிகரித்திருந்த போதும், செலவினக் கட்டுப்படுத்துவது தொடர்பில் சபையின் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(iii) மீளாய்வாண்டின் சபையின் சுய வருமானமீட்டல் வருமானம் முன்னைய ஆண்டிற்கு ரூபா 8,321,971 ஆல் அதாவது 16 வீழ்ச்சியொன்று தென்பட்டது.

(iv) மீண்டுவரும் செலவினம் ஒவ்வொரு ஆண்டிலும் சுய வருமானம் ஈட்டல் வருமானத்தை விஞ்சிய கருத்திற் கொள்ளக்கூடிய பெறுமதியில் மீண்டெழும் செலவினம் காணப்பட்டதுடன், வருமான மானியம் கிடைக்காவிட்டால் சபையின் வருமானத்திலிருந்து மீண்டெழும் செலவினத்தை மேவுகை செய்வதற்கு இயலுமை இயலுமை கிடைக்கவில்லையென்பது தென்பட்டது.

**2.3 வருமான நிருவாகம்**

**2.3.1 வீத வரி**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 08 வீதவரி பிரிவுகளில் ரூபா 50,000 இற்கு மேற்பட்ட மீதிகள் காணப்பட்ட 31 குத்தகையாளர்களிடமிருந்து மீளாய்வாண்டின் இறுதி வரையில் ரூபா 2,902,491 ஆன நிலுவை காணப்பட்டது. நிலுவை வீதிவரியை அறவிடுவதற்காக நகர சபை அதிகாரச் சட்டத்தின் 170(2) பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) 03 வருமான பரிசோதகர்களால் மீளாய்வாண்டில் அறவிடப்பட்ட நிலுவை வீத வரி வருமானம் ரூபா 320,663 ஆக இருந்ததுடன் அதது ஆரம்ப மீதியின் 3 சதவீதமாக இருந்தது.

**2.3.2 குத்தகை**

மீளாய்வாண்டின் இறுதியில் 106 கடைகளிலிருந்து ரூபா 1,459,333 ஆன நிலுவை வீதவரி மீதியொன்று அவதானிக்கப்பட்டதுடன், அதில் 04 கடைகளிலிருந்து 03 வருட காலமாக அறவிடாமல் காணப்படும் ரூபா 159,564 மற்றும் மேலும் 05 கடைகளிலிருந்து அறவிடப்பட வேண்டியிருந்த 01 முதல் 03 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலமாக நிலுவையாக காணப்படும் ரூபா 876,617 ஆன மீதியும் உள்ளடக்கப்பட்டிருந்தன.

**2.3.3 முத்திரைக கட்டணம்**

மீளாய்வாண்டின் இறுதியில் நிலுவையாக இருந்த ஏனைய வருமான மீதிகளில் உள்ளடக்கப்பட்ட கிடைக்க வேண்டிய முத்திரைக் கட்டண வருமானம் ரூபா 49,859,838 ஆக இருந்ததுடன், அதில் ரூபா 40,239,705 தொகையொன்று முன்னைய ஆண்டிற்கு முன்னரான காலப்பகுதிக்கு கிடைக்க வேண்டிய தொகையாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல் மதிப்பீடு

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் மூலதனச் செலவினம் ரூபா 28,338,000 ஆக இருந்த போதிலும், உள்ளபடியான செலவினம் ரூபா 3,233,976 ஆக இருந்தமையால் ரூபா 25,104,024 சேமிப்பு அவதானிக்கப்பட்டதுடன் அப்பெறுமதி மதிப்பிடப்பட்ட நிதிஏற்பாட்டில் 89 சதவீதமாக இருந்தது. அதன் பிரகாரம் அதிகாரப் பிரதேசத்தின் அபிவிருத்திக்காக ஒதுக்கப்பட்டிருந்த நிதிஏற்பாடு, உண்மையாகவே அந்நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக ஈடுபடுத்துவதில் பின்னடைவு நிலைமையொன்றைக் காண்பித்ததுடன், அது சபையினதும் சபை அதிகாரப் பிரதேசத்தின் மக்களுக்கு இடம்பெற்ற நட்டமொன்றாகவும் மூலதனச் செலினத்தை திட்டமிடுவதில் பலவீனமெனவும் அவதானிக்கப்பட்டது.

(ஆ) நகர சபை அதிகாரப் பிரதேசத்தில் 07 அபிவிருத்தி வேலைகளுக்காக கிடைக்கப்பெற்ற ரூபா 4,741,579 ஆன பணம் அச்செயற்திட்டங்களை செயற்படுத்துவதற்கு பயன்படுத்தாமல் 03 ஆண்டு முதல் 07 சேமிப்புக் கணக்குகளில் வைப்புச் செய்யப்பட்டிருந்தன.

### 3.2 முகாமைத்துவ வினைத்திறனின்மை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) பதவியணியினர் திட்டத்தில் அங்கீகரிக்கப்படாத பதவிகளில் 41 மிகையும் 08 வெற்றிட பதவிகளும் காணப்பட்டன. மிகை பதவிகளை முறைப்படுத்தவும் வெற்றிடங்களை நிரப்புவதற்கும் மீளாய்வாண்டின் போது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) அம்பலாங்கொடை மணிக்கூட்டுக் கோபுரத்தின் முன்னால் புதிய வீதி மற்றும் பெரிய வீதி தொடர்புபடுகின்ற குறுக்கு வீதிக்கான காணியை கையேற்பதற்கு வழங்கப்பட்ட ரூபா 3,984,864 ஆன இழப்பீட்டுத் தொகை 2013 ஆம் ஆண்டு முதல் கடன்கொடுத்தோர் மீதியில் உள்ளடக்கப்பட்டிருந்ததுடன் இழப்பீட்டை செலுத்தி அக்காணியை தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) உடன்படிக்கையின் பிரகாரம் ஒரே தடவைப் பணத்தை அறவிடாமல் நகர சபைக்குரிய கடற்றொழில் வியாபார தொகுதி குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் ரூபா 259,584 ஆன நிலுவை மீதியொன்று காணப்பட்ட போதிலும் அப்பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) சேவையிலிருந்து ஓய்வுபெற்ற மற்றும் இடமாற்றம் பெற்றுச் சென்ற உத்தியோகத்தர்கள் 14 பேரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 141,794 ஆன கடன் மீதிகளும் சேவையை விட்டுச் சென்ற, அமைய மற்றும் சமயா சமய ஊழியர்கள் 50 பேரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 51,245 ஆன கடன் மீதிகளை அவர்களிடமிருந்து அறவிடுவதற்கோ அல்லது பிணையாளர்களிடமிருந்தோ அறவிடுவதற்கோ நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(உ) 1990 ஒக்தோபர் 10 ஆந் திகதிய 41/90 ஆம் பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் பிரகாரம் சபையினால் பயன்படுத்தப்படும் 21 வாகனங்களின் எரிபொருள் எரிவு பரிசோதனை மேற்கொள்ளப்படாதிருந்துடன், மீளாய்வாண்டிற்காக 09 வாகனங்களுக்காக வருமான அனுமதிப்பத்திரமும் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஊ) அமைய மற்றும் தற்காலிக ஊழியர்களுக்காக ஊழியர் சேமலாப நிதியத்திற்கு உரிய பிரகாரம் பங்களிப்புத் தொகை அனுப்பாமையால் அதன் மீது கணிப்பிடப்பட்ட ரூபா 71,937 மிகை மேலதிக கட்டணம் கொடுப்பனவு செய்வதற்கு நேர்ந்திருந்தது. எவ்வாறாயினும் அதற்கு பொறுப்பான உத்தியோகத்தர்கள் தொடர்பாக இலங்கை நிதிப்பிரமாணம் 156(1) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.3 செயற்பாட்டு வினைத்திறனின்மை

சபையினால் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருந்த ஊழியர்களின் சம்பளம் மற்றும் படிகள் கொடுப்பனவிற்காக சபையின் வருமானத்திலிருந்து ரூபா 11,543,247 செலவிட நேர்ந்திருந்தது.

### 3.4 ஒப்பந்த நிர்வாகம்

2013 திட்டவட்டமான அபிவிருத்தி மானியத்தின் கீழ் அம்பலாங்கொடை நகர சபை எல்லைக்குரிய கல்கஸ்கொடை சிறிய பாலத்திற்கு அருகில் இருந்து பெரிய பாலம் வரையான வீதியில் ஒரு பக்கத்தில் உடற்பயிற்சி ஒழுங்கையொன்று நிர்மாணிப்பதற்காக ரூபா 3,000,000 மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. பெறுகை அறிவித்தலை மேற்கொள்வதற்கு ரூபா 53,760 தொகையும் உடன்படிக்கை பிரகாரம் தனியார் நிறுவனமொன்றுக்கு முதலாவது மற்றும் இரண்டாவது பகுதி கொடுப்பனவிற்காக ரூபா 2,323,859 தொகையும் (உள்ளூராட்சி மன்ற பொறியியலாளரின் அங்கீகாரத்திற்கு உட்பட்டு) கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) அம்பலாங்கொடை பட்டபொல வீதி கீழிறங்குவதால் செயற்திட்டம் தற்காலிகமாக இடை நிறுத்தப்பட்டிருந்தது.

(ஆ) செயற்திட்டத்தை ஆரம்பிப்பதற்கு முன்னர் ஆரம்ப சாத்தியவள ஆய்வு மேற்கொள்ளப்படாதிருந்ததுடன், நிர்மாணம் தொடர்பாக தொழில்நுட்ப உத்தியோகத்தரின் பரிந்துரை இல்லாமல் மதிப்பீட்டு தொகையில் 80 சதவீதம் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

### 3.5 திண்மக் கழிவு முகாமைத்துவம்

(அ) திண்மக் கழிவு முகாமைத்துவ செயற்திட்டமாக ஆரம்பிப்பதற்காக கிடைத்த இயந்திரம் 2012 ஆம் ஆண்டிற்கு முன்னர் எவ்வித பயன்பாட்டிற்கும் எடுக்கப்படாமல் களஞ்சியத்தில் வைக்கப்பட்டிருந்தது. இயந்திரம் கிடைத்த திகதி உட்பட எந்த நிறுவனத்திடமிருந்து கிடைத்தது என்பது தொடர்பாக எவ்வித தகவலும் சபையிடம் இல்லாமல் இருந்ததுடன் அதன் பெறுமதியும் நிதிக்கூற்றுக்களுக்கு கொண்டு வரப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே பிரதேசத்தின் கழிவுப் பொருள் முகாமைத்துவ முறையான நடைமுறையொன்று தயாரித்து செயற்படுத்துவதற்கும் சபையால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) உள்ளூராட்சி நிறுவனங்களில் கழிவுப்பொருள் முகாமைத்துவத்தை முன்னேற்றுவதற்காகக் கழிவை ஒதுக்கிச் சேகரிக்கும் தேசிய நிகழ்ச்சித்திட்டங்களின் கீழ் 2014 ஆம் ஆண்டில் உள்ளூராட்சித் திணைக்களத்திடமிருந்து சபைக்கு கிடைக்கப்பெற்ற 29 கழிவுக் கொள்கலன்கள் பயன்படுத்தப்படாது களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தன.

## 4. கணக்களிப் பொறுப்பும் நள்ளாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

பாதீட்டில் உள்ளடக்கப்பட்ட 06 செலவின விடயங்களில் ரூபா 16,227,696 கூட்டுத்தொகையான சேமிப்புக்களும், மேலும் 02 செலவின விடயங்களில் வரையறையை விஞ்சிய ரூபா 501,367 செலவினமும் 05 வருமான விடயங்களில் இலக்கினை அடையாத

ரூபா 11,924,914 வருமானமும் காணப்பட்டமையால் சுய வருமான உழைப்பில் 30 சதவீதம் மூலதன செலவினத்திற்காக ஒதுக்கப்படாமை போன்ற காரணங்களினால் பாதீடு ஆக்கபூர்வமான நிதி முகாமைத்துவக் கட்டுப்பாட்டுச் சாதனமாகப் பயன்படுத்தப்படவில்லையென அவதானிக்கப்பட்டது.

**4.2 உள்ளகக் கணக்காய்வு**

இலங்கை குடியரசின் நிதிப்பிரமாணம் 133 மற்றும் 134 இன் ஏற்பாடுகள் மற்றும் 2014 பெப்ரவரி 04 ஆந் திகதிய தபபா/யஹ/01/ந.வ.வே ஆம் இலக்க உள்ளூராட்சி ஆணையாளரது (தென்மாகாணம்) சுற்றறிக்கையின் பிரகாரம் போதியளவு உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அத்துடன் சபையினால் நியமிக்கப்பட்டிருந்த உள்ளகக் கணக்காய்வு உத்தியோகத்தருக்கு மீளாய்வாண்டின் போது சம்பளமும் படியுமாக ரூபா 461,040 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

**4.3 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக்கள்**

2009 யூன் 09 ஆந் திகதிய DMA/2009(i) ஆம் இலக்க முகாமைத்துவக் கணக்காய்வுச் சுற்றறிக்கையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்களை அமைப்பதற்கு மீளாய்வாண்டு இறுதிவரை நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை.

**4.4 சொத்துக்கள் முகாமைத்துவம்**

கீழே காணப்படும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) (i) சபை வளவில் சிதைவடைந்து காணப்படும் உழவு இயந்திரமொன்றும் முச்சக்கர வண்டியொன்றும் கைஉழவு இயந்திரமொன்றும் 2015 யூலை 10 ஆந் திகதிய 02/2015 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் திருத்தியமைத்து பயன்பாட்டிற்கு எடுப்பதற்கு அல்லது கைதவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்த களஞ்சிய மீதிக்கு உள்ளடக்கப்பட்ட 2014 ஆம் ஆண்டிற்கு முன்னர் கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 181,197 பெறுமதியான மர இருப்பு 2016 யூலை 31 ஆந் திகதி வரையிலும் களஞ்சியத்தில் விளைவற்ற வகையில் காணப்பட்டன.

(ஆ) 2015 மார்ச் 01 ஆந் திகதி சபை நிதியத்திலிருந்து ரூபா 2,834,458 செலவினம் மேற்கொள்ளப்பட்டு நகர சபையின் ஆயுர்வேத நிலையம் காணப்பட்ட கட்டிடத்தை உடற்பயிற்சி நிலையமொன்றாக நவீனமயப்படுத்தல் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. தனியார் நிறுவனமொன்றினால் 07 உடற்பயிற்சி உபகரண தொகுதிகள் நன்கொடையாக வழங்கப்பட்டிருந்ததுடன், சபை நிதியத்திலிருந்தும் ரூபா 468,000 செலவு செய்து மேலும் 10 உபகரணங்களும் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. எனினும் மதியுரையாளர் ஒருவர் இல்லாமை காரணமாக 2015 ஒக்தோபர் 25 ஆந் திகதி முதல் நிலையம் மூடப்பட்டிருந்தது.

**4.5 தீர்த்து வைக்கப்படாத பொறுப்புக்கள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) நிதிக்கூற்றுக்களில் முன்கொண்டு வரப்பட்டுவரும் உள்ளூராட்சி மன்ற ஓய்வூதிய நிதியத்திற்கு செலுத்த வேண்டிய ரூபா 10,852,769 என நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் அப்பணத்தை ஓய்வூதிய திணைக்களத்திற்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ஆசிய அபிவிருத்தி வங்கியின் நகர அபிவிருத்தி செயற்திட்டத்தின் மூலம் பஸ் நிறுத்துமிட நிர்மாணம் மற்றும் இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் பெற்றுக்கொள்வதற்காக 1998 ஆம் ஆண்டின் போது சபையினால் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்த ரூபா 51,792,000 ஆன கடன் தொகையின் தவணைக் கொடுப்பனவு 2010 யூன் 30 ஆந் திகதியின் பின்னர் நிறுத்தப்பட்டிருந்தது. 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் செலுத்த வேண்டிய கடன் தொகை ரூபா 33,857,797 ஆக இருந்ததுடன் அதற்கு மேலதிகமாக செலுத்த வேண்டிய வட்டித் தொகை ரூபா 39,598,905 வரை அதிகரித்திருந்தது.

5. **முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

---------------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக சபையின் விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு

(இ) வருமான நிருவாகம்

(ஈ) மனித வள முகாமைத்துவம்

(உ) வாகனக் கட்டுப்பாடு